## இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

### 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2.1, 1.2.2, 1.2.3, 1.2.4 மற்றும் 1.2.5 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

2012 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி படிவங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திறைசேரியினால் குத்தகை அடிப்படையில் சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 12.2 மில்லியன் பெறுமதியான இரண்டு கப் வாகனங்களின் பெறுமதி மற்றும் ரூபா 2.4 மில்லியன் பெறுமதியான அதன் பெறுமானத் தேய்வுகள் மீளாய்வாண்டின் நிதி அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இரண்டு கப் வாகனங்களுக்காக செலவிடப்பட்ட அரை சொகுசு வரித்தொகையும் பதிவுக் கட்டணமான ரூபா 87,755 தொகையும் நிலையான சொத்தாகக் கணக்கு வைக்கப்பட்டு அதற்காக ரூபா 17,551 தொகையான பெறுமானத் தேய்வுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்களின் பட்டோலைகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 546,352 தொகையான பல்வேறு சொத்துக்களில் பதிவழிக்கப்பட்ட பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டில் கட்டிடத்தில் சேர்க்கப்பட்ட ரூபா 12,639,162 பெறுமதி தொடர்பான விபரங்கள் நிலையான சொத்துக்களின் பட்டோலைகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திவிநெகும செயற்திட்டத்தின் வங்கி மீதியான ரூபா 3,666,095 தொகை நிதி நிலைமைக் கூற்றில் வங்கி மீதி என்ற பெயரில் வகைப்படுத்தப்படாது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அந்த வங்கிக் கணக்கு மீதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கிடைக்கவேண்டிய பெறுமதி சேர் வரியாக ரூபா 12,895,522 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 அந் திகதியில் உள்ளவாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வரி அறிக்கையில் அது ரூபா 567,848 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 12,327,674 தொகை எதிர்காலத்தில் அறவிட முடியாத பெறுமதி சேர் வரி நடைமுறைச் சொத்துக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) தற்போது உபயோகத்தில் இல்லாத கிடைக்க வேண்டிய பண்டங்கள், சேவைகள் வரியான (GST) ரூபா 1,424,654 தொகை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(எ) காசப் பாய்ச்சல் கூற்று தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 03 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 25,000 தொகையான நிலையான வைப்பு மீதி காசப் பாய்ச்சல் கூற்றில் ஆரம்ப மற்றும் இறுதிக் காசு மீதியில் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ii) வட்டிச் செலவினமான ரூபா 19,644 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) விளக்கமளிக்கப்படாத ரூபா 5,311,000 தொகை முன்னைய ஆண்டின் சீராக்கமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் வரிக்கு முந்திய நட்டத்தின் கீழ் சீராக்கப்பட்டிருந்தது.

(iv) நிதிக்கூற்றின் பிரகாரம் அரசாங்கத்தின் தேறிய பங்களிப்பு ரூபா 14,887,216 ஆக இருந்த போதிலும் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 18,000,000 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) முதலீடு செய்யப்படாத ரூபா 3,113,000 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) நிதி நிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட பெறுமதியை நிலையான சொத்துப் படடோலைகளுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 506,573 கூட்டுத்தொகையான நான்கு சொத்து விடயங்கள் குறைவாகவும், ரூபா 3,186,235 கூட்டுத்தொகையான ஆறு சொத்து விடயங்கள் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ‘‘பின்’’ பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 5,060,052 தொகையான உடைந்த பொருள் இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த இருப்பு பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) என உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வரி அறிக்கையில் (Tax Return) காண்பிக்கப்பட்ட பெறுமதி ரூபா 842,733 இனால் மிகைப்படுத்தப்பட்டு ரூபா 1,286,073 என நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சபையினால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த நிதியங்களுக்குச் செலுத்த வேண்டிய மீதிகளில் முறையே ரூபா 244,841 மற்றும் ரூபா 34,818 தொகைகள் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட உடைந்த பொருட் கணக்கிற்கும் விற்பனைப் பிரிவில் பேணப்படுகின்ற

அறிக்கைகளுக்கும் இடையில் ஒப்பீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ரூபா 8,056,748 தொகையான உடைந்த பொருட் கணக்கு அதிகமாவும் ரூபா 141,822 தொகையான உடைந்த விற்பனைகள் குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கிடைக்கவேண்டிய பெறுமதி சேர் வரியாக ரூபா 12,895,522 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வரி அறிக்கையில் ரூபா 567,848 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 12,327,674 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.2.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) கிடைக்க வேண்டிய கணக்குகள்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 5 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்பட்டோர்களின் பெறுமதி ரூபா 32,585,627 ஆக இருந்ததுடன் அம் மீதியினைத் தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 58,419,824 தொகையான கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீதியை உறுதிப்படுத்தி கணக்காய்விற்கு அனுப்புமாறு முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 20,725,888 கூட்டுத்தொகையான அறவிடவேண்டிய 23 மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 44 கணக்குகளுக்குரிய ரூபா 112,869,335 தொகையான கடன்கொடுத்தோர் மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கைத்தொழில் மயமாக்கல்களில் இருந்து நீங்கியதாக அவதானிக்கப்பட்ட 239 கைத்தொழிலாளர்களுக்குரிய ரூபா 5,873,965 தொகையான மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் கணக்குகளில் பிழையான பெறுமதிகளாகக் காட்டப்பட்டிருந்தன.

(iii) அரசின் காணிகளின் உரித்துறுதி கையளித்தல் தடைசெய்யப்பட்டிருந்த போதிலும் கைத்தொழில் மயமாக்கல்களில் காணப்படுகின்ற அரசின் காணிகளின் உரித்துறுதிகளைக் கையளிப்பதற்காக 126 கைத்தொழிலாளர்களிடமிருந்து பெறப்பட்டிருந்த ரூபா 14,843,613 தொகையான வைப்புப் பணம் பல வருட காலமாகத் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 81,096,571 தொகையான கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| காணி | 58,470,313 | விபரமான பட்டோலை |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகள் | 14,298,021 | உறுதிப்படுத்தல் அறிக்கை |
| உடைந்த இருப்புக்கள் | 5,060,052 | உறுதிப்படுத்தல் அறிக்கை |
| பூர்த்தியடைந்த இருப்புக்கள் | 2,480,536 | உறுதிப்படுத்தல் அறிக்கை |
| பேலியாகொடை இறப்பர் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் | 21,679,394 | இருப்புப் பேரேடு |
| வங்கி மீதி | 19,529,989 | மீதி உறுதிப்படுத்தல் |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் உப பந்தி | வெளிக்களக் கடமைகளில் ஈடுபடுகின்ற போது உத்தியோகத்தர்களுக்கு தமது செலவினங்களை ஈடுசெய்துகொள்வதற்கு இணைந்த படிகள் மற்றும் பிரயாணச் செலவினங்களை வழங்க முடியுமான போதிலும் அதற்கு மேலதிகமாக திவிநெகும செயற்திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக பிரயாணப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. 2012 சனவரி தொடக்கம் மார்ச் வரை அதற்காக ரூபா 40,856 தொகை செலவிடப்பட்டிருந்தது. |

(ஆ) அரசாங்க நிதிப்பிரமாணங்கள்

| | | |
|---|---|---|
| (i) | நி.பி 104 மற்றும் 109 | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 132,107 தொகையான பல வருட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற காசு மீதி பௌதீக ரீதியில் காணப்படாதிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி 110 | இழப்பு மற்றும் நட்டப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி 453 | ஆளணி சம்பளப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நி.பி 751(1) மற்றும் சபையின் களஞ்சிய நடைமுறைக் கோவையின் 52(1) ஆம் பிரிவு | களஞ்சியப் பொறுப்பாளரினால் களஞ்சியப் பேரேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நி.பி 772 | பல வருட காலமாக பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட தகுதியற்ற அகற்றப்பட வேண்டிய பொருட்கள் தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நி.பி 802(1),(2) மற்றும் (3) | வாகன பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செவினங்களாக செலவிடப்பட்ட ரூபா 3,178,180 தொகையை பரீட்சிப்பதற்காக உரிய பதிவேடு மற்றும் 37 கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (vii) | நி.பி 1645(அ) | 08 வாகனங்கள் தொடர்பாக வாகன சம்பவத்திரட்டுப் புத்தகம் முறையான வகையில் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | நி.பி 1645(ஆ) மற்றும் (ஈ) நி.பி 1646 | வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் பிரயாணம் தொடர்பான மாதாந்த பொழிப்பு அறிக்கை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) சுற்றுநிருபங்கள்

---------------------------

| | | |
|---|---|---|
| (i) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றிக்கை | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 242.6 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றிக்கை | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 8.9 மில்லியன் தொகையான கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவை

-----------------------------------------------

| | |
|---|---|
| 6.3.6 வழிகாட்டிக் கோவை | பேலியகொடை இறப்பர் நிறுவனத்திற்கு ரூபா 4,178,711 பெறுமதியான மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கேள்வி திறத்தல் தொடர்பான செயற்பாடுகள் உரிய படிவத்தில் குறிப்பிடப்பட்டு கொள்வனவுக் குழுவின் சகல உத்தியோகத்தர்களும் அதில் கையொப்பம் இடவேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் நடைமுறைச் செலிவனங்களுக்காக அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 227.4 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு விளைவுகள் அரசாங்கத்தின் பங்களிப்பினைக் கணக்கிற்கு எடுப்பதற்கு முன் ரூபா 257.5 மில்லியன் பற்றாக்குறையாக இருந்தது. அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் அரசாங்கத்தின் பங்களிப்பான ரூபா 228 மில்லியனைக் கணக்கிற்கு எடுப்பதற்கு முன் பற்றாக்குறை ரூபா 234.8 மில்லியனாக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 22.7 மில்லியன் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. உள்ளக வருமானம் ரூபா 2 மில்லியனால் குறைவடைந்தமை, மூலப்பொருள் பயன்பாடு ரூபா 10.8 மில்லியனால் அதிகரித்தமை, பதவியணியினர் செலவினங்கள் ரூபா 9 மில்லியனால் அதிகரித்தமை மற்றும் ஒப்பந்த சேவை செலவினங்கள் ரூபா 3.6 மில்லியனால் அதிகரித்தமை என்பன நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கான அடிப்படைக் காரணமாக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

ஒவ்வொரு ஆண்டினதும் அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுத்ததன் பின்னர் 2010 ஆம் ஆண்டில் ரூபா 18.6 மில்லியன் தொகையும், 2011 ஆம் ஆண்டில் ரூபா 6.7 மில்லியன் தொகையும், 2012 ஆம் ஆண்டில் ரூபா 30.1 மில்லியன் தொகையுமாக சபை தொடர்ச்சியாக தேறிய நட்டத்தைப் பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் திரண்ட தேறிய நட்டம் ரூபா 367.2 மில்லியனாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### (அ) கிராம அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் பொதுச் சேவை நிலையம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொதுச் சேவை நிலையங்களுடன் 106 உற்பத்திக் கிராமங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 15 நிலையங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மக்கள் மயப்படுத்தப்பட்ட 91 பொதுச் சேவை நிலையங்களில் 25 செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(iii) பொதுச் சேவை நிலையங்கள் அற்ற 156 உற்பத்திக் கிராமங்களில் 94 நிலையங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

**(ஆ) திவிநெகும செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மாவட்ட மட்டத்தில் தொழிற் பயிற்சியைப் பூர்த்தி செய்த 2100 நலனாளிகளில் 574 பேருக்கு மாத்திரம் தொழிலைச் செய்வதற்குத் தேவையான உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பயிற்சி பெற்ற நலனாளிகளில் அனேகமானோருக்கு தொழிலைச் செய்வதற்குத் தேவையான உபகரணங்கள் இல்லாமையினால் அதன் அடைவுத் தன்மை குறைவடைந்திருந்தது.

(ii) திவிநெகும செயற்திட்டத்தின் நலனாளிகளுக்காக கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 2011 ஆம் ஆண்டின் போது திருகோணமலை மாவட்டச் செயலாளருக்கு ரூபா 12,350,000 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தொகையிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 5,922,190 தொகை அதாவது 48 சதவீதம் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் கட்டிட நிர்மாணத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 8.2 மில்லியன் நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 4.2 மில்லியன் அதாவது 51 சதவீதம் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் களஞ்சிய நடைமுறைக் கோவையின் 50.1.1 ஆம் பந்தியின் பிரகாரம் களஞ்சியப் பொறுப்பாளரின் பொறுப்பிலுள்ள சகல பொருட்கள் தொடர்பாகவும் பின்காட் பத்திரம் பேணப்பட வேண்டிய போதிலும் கித்துள் செயற்திட்டத்தினதும் கிராமிய செயற்திட்டத்தினதும் இருப்பு தொடர்பாக மாத்திரம் பின்காட்

பேணப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்த இருப்புக்களின் பெறுமதி ரூபா 13,408,599 ஆக இருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் ஊழியர் நலன்புரி வைத்திய உதவிச் செயற்திட்டத்திற்காக 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 யூலை 31 ஆந் திகதி வரை ரூபா 7,136,207 தொகை சபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

வைத்திய உதவிச் செயற்திட்ட ஏற்பாடுகளின் 20 ஆவது பிரமாணத்தின் பிரகாரம் கணக்கு மற்றும் கட்டுப்பாட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சபையின் கட்டுப்பாட்டுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பல வருட காலமாக அவ்வாறு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அதற்காக கணக்காய்வாளரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. சபை ரூபா 4,063,571 தொகையான வைத்திய உதவியை நிதியத்திலிருந்து பெற்றிருந்ததுடன் அந்தத் தொகையும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வைத்திய உதவி நிதியத்தில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூன்று மாடிகளையுடைய கட்டிடத்தின் தரைமாடி மற்றும் இரண்டாவது மாடி மாத்திரம் லக்கம் விற்பனை நிலையத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மூன்றாவது மாடி ஆய்வுகூடமாகப் பயன்படுத்தப்படுகின்றது. மூன்று மாடிகளுக்காகவும் ஒரு மின்மாணி பொருத்தப்பட்டமையினால் இந்த நிலையம் உழைக்கின்ற வருமானத்தில் அதிகமானவற்றை மின்சாரத்திற்காகச் செலவிட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் போதும் ரூபா 1,757,740 தொகை மின்சாரத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. இந்த நிலையம் பல வருடங்களாக நட்டத்துடன் நடாத்தப்படுகின்றது.

(இ) அலுவலக மற்றும் மலசலகூட வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கூறப்பட்ட கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக நிர்மாணங்களுக்காக 2009 ஆம் ஆண்டில் ரூபா 7,000,000 தொகையும், 2011 ஆம் ஆண்டில் ரூபா 3,000,000 தொகையும் நிதியேற்பாடாக திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்தது. 2009 ஆம் ஆண்டின் போது திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்படுத்தல்கள் 2011 மார்ச் மாதம் வரை தாமதிக்கப்பட்டிருந்ததுடன் 2011

ஆம் ஆண்டின் போது இந்தக் கட்டிடத்தின் மொத்தக் கிரயமான ரூபா 10,000,000 தொகைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிராததுடன் மேலதிக நிர்மாணத்தில் 02 மாடிகள் 2012 ஏப்ரல் வரையிலும் நிர்மாணிக்கப்படாதிருந்த போதிலும் அதன் கூரையை உள்ளடக்கிய ஏனைய வேலைகள் நிறைவேற்றப்படாமையினால் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக சுயநடவடிக்கைகளுக்கும் இடையூறாகக் காணப்படுகின்றது.

(ஈ) சபையின் அருகில் அமைந்துள்ள அரசாங்கக் காணியில் கைத்தொழிலாளர்களுக்கு முற்பதனிடும் நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு 2005 ஆம் ஆண்டில் அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் அந்தக் காணி கையேற்கப்பட்டிருக்கவில்லை. உத்தேசிக்கப்பட்ட காணியில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் வதிவிடத்தைக் காரணமாகக் கொண்டு முற்பதனிடும் நிலையம் அமுற்படுத்தப்படாதிருந்ததுடன் அந்தக் காணியில் உள்ள சபையின் உடைந்த பொருள் செயற்திட்டத்திற்கும் களஞ்சிய வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளை அமுற்படுத்தியதனால் எழுந்த சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக பொருத்தமான சீராக்கங்களைப் பெறும் வகையில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நியமிக்கப்பட்ட ஆலோசனையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் சிபார்சுகள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமுற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் வசதிகளை வழங்கும் நோக்கத்தில் சுழற்சி நிதியமொன்றை உருவாக்குவதற்காக செஸ் நிதியத்திலிருந்து ரூபா 10 மில்லியன் தொகை சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 10.7 மில்லியன் தொகையான அத்தொகை சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(எ) உடைந்த பொருள் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க உடைந்த பொருட்களைக் கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்துதல் என்பவற்றுக்கு பொருத்தமான முறைமைகள் தயாரிக்கப்பட்டு

அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமையை காரணமாகக் கொண்டு செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது பல்வேறு போலியானவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை பின்வருமாறு அவதானிக்கப்பட்டிருந்தன.

(i) 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட பிரமாணங்களுக்கு முரணாக முற்கொடுப்பனவாக ரூபா 108.5 மில்லியன் தொகை பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அந்த முற்பணத் தொகையிலிருந்து ரூபா 52.3 மில்லியன் தொகை உடைந்த பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்தது.

(ii) சபை கொள்வனவு செய்கின்ற உடைந்த பொருட்களுக்காக பல்வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு 2009 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை ரூபா 2,170,727 தொகை செலுத்தவேண்டியிருந்தமை செயற்திட்ட விற்பனைப் பிரிவின் அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரிவின் கணக்குகளில் அந்தத் தகவல்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்தத் தொகை தீர்க்கப்பட்டிருக்கவும் இல்லை.

(iii) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உடைந்த பொருட்கள் பிரிவின் வங்கிக் கணக்கின் வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 296,962 மற்றும் ரூபா 516,279 தொகைகளாக ரூபா 813,241 கூட்டுத்தொகையானது இனங்காணப்படாத வைப்புக்கள் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) லக்கம் விற்பனை நிலைய கைத்தொழிலாளர்களின் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதன் பின்னர் காசு செலுத்தும் அடிப்படையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதுடன் இருப்புப் பெறுவனவுகள் மற்றும் விநியோகித்தல்களுக்காக உரிய பிரகாரம் இருப்புப் புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. அதற்குப்

பதிலாக ஒவ்வொரு வழங்குனருக்காகவும் பேணப்படுகின்ற கோவைகளில் முறையற்ற வகையில் இருப்புப் பெறுவனவு மற்றும் விநியோகித்தல்கள் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச அலுவலகங்களுக்காக செயற்படுத்தப்படுகின்ற வங்கி நடைமுறைக் கணக்கு மூடப்பட்டிருந்த போதிலும் அந்த 08 வங்கிக் கணக்குகளில் ரூபா 135,233 தொகையான சாதக மீதியும் 01 வங்கிக்கணக்கில் ரூபா 175 தொகையான மேலதிகப்பற்று மீதியும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) சபையின் வங்கிக் கணக்குகளில் மீளாய்வாண்டில் மேலதிகப்பற்று மீதிகள் காணப்பட்டமையினால் அதற்கான வட்டியாக ரூபா 19,663 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சபையில் அமுல்படுத்தப்படுகின்ற உடைந்த பொருட்கள் செயற்திட்டத்தின் ஊடாக பல்வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு உடைந்த பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் மேற்கொள்ளப்பட்ட ரூபா 37,992,038 தொகையான முற்கொடுப்பனவுகளுக்காக பணம் அல்லது உடைந்த பொருட்கள் பெறப்படாது மீண்டும் அவ்வாறான 08 நிறுவனங்களுக்காக ரூபா 28,391,374 தொகையான முற்கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன.

### 3.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

அச்சிடல் பிரிவிற்குரிய 03 அச்சிடல் இயந்திரங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் அதில் ஒரு இயந்திரத்தின் (wire stiching Machine) பெறுமதி ரூபா 211,495 ஆக இருந்தது. மிகுதி இரண்டு இயந்திரங்களினதும் (offset Machine & Cutter) பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் அந்த இயந்திரங்கள் பல வருட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த இயந்திரங்களை பழுதுபார்த்து பாவனைக்கு எடுப்பதற்கோ அல்லது பொருத்தமானவற்றைச் செய்வதற்கோ 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சிக்கனமற்ற செலவினங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வளவாளர்கள் தெரிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் அவர்களுக்காக மணித்தியாலமொன்றிற்கு ரூபா 1,000 , ரூபா 2,000 மற்றும் நாளொன்றிற்கு ரூபா 6,000 படி பல்வேறு வீத அளவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்காக பெறப்பட்ட அங்கீகாரம் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திவிநெகும செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட நிதியிலிருந்து ரூபா 6,000,000 தொகை 3 சந்தர்ப்பங்களின் போது சபையின் ஏனைய கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,400,000 தொகை மேலும் செயற்திட்டக் கணக்கிற்கு கிடைக்க வேண்டியிருந்தது.

(இ) ஊழியர் வழக்கிற்கான நிலுவை சம்பளம் மற்றும் சட்டத்தரணிக் கட்டணமான ரூபா 562,800 தொகையான திவிநெகும செயற்திட்டத்திற்குரித்தற்ற செலவினம் அந்த செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) உடைந்த பொருள் செயற்திட்டத்தின் நிதியம் அந்த செயற்திட்ட செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டிய போதிலும் அதற்குப் புறம்பாக அந்த நிதியத்திலிருந்து ரூபா 3,171,000 செலவினைச் செய்து சபையின் உத்தியோகத்தர்களுக்காக 25 மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.6 இனங்காணப்பட்ட நட்டம்

உடைந்த பொருட்கள் பிரிவில் கொள்வனவு செய்யப்பட்ட 15 மின்மாற்றிகள் வெளியில் மூடப்படாமல் உள்ளே வைக்கவேண்டிய செப்புக்கம்பி லெமினேசன் மற்றும் மின்மாற்றி ஒயில் என்பன அகற்றப்பட்டிருந்தன. இருப்பு அறிக்கையின் பிரகாரம் அதன் கொள்விலை ரூபா 1,270,964 ஆக இருந்தது. இந்த இருப்பு பௌதீக ரீதியில் உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் ஏற்பட்ட இருப்பு இழப்பு தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்

கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு ஆட்சேர்க்கப்பட்ட தொகைமதிப்பு ஆய்வாளர் மற்றும் இரண்டு சாரதிகள் என்போர் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்தனர். 2012 மே மாதம் வரை அவர்களின் சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவுகளுக்காக ரூபா 5,283,026 தொகை சபையினால் செலவிடப்பட்டிருந்த போதிலும் அப்பணம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.8 மனித வள முகாமைத்துவம்

சபையின் அங்கீகரிக்கப்பட்ட, உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை மற்றும் வெற்றிடம் என்பன பின்வருமாறு இருந்தது.

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மேல் மற்றும் மத்திய முகாமைத்துவம் | 80 | 69 | 11 |
| கீழ் முகாமைத்துவம் | 182 | 107 | 75 |
| முகாமைத்துவ சேவை | 186 | 128 | 58 |
| தொழில் தகைமையுடைய | 149 | 76 | 73 |
| தொழில் தகைமைற்ற | 117 | 99 | 18 |
| மொத்தம் | 714 | 479 | 235 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ஆட்சேர்த்தல் நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 235 வெற்றிடப் பதவிகள் 2012 திசெம்பர் 31 வரையிலும் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 மே மாதம் தொடக்கம் 2012 திசெம்பர் 31 வரை சபையினால் 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்திற்கு முரணாக அங்கீகாரமின்றி அமைய அடிப்படையில் 48 பேர் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் சேவைக்காலம் 1 தொடக்கம் 5 வருடங்கள் வரையான வீச்சுடையதாக இருந்தது.

### 3.9 ஊழியர் பணிக்கொடை ஏற்பாடுகளுக்கான நிதியமொன்றைக் கட்டியெழுப்புதல்

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 100,990,758 தொகையான ஊழியர் பணிக்கொடை ஏற்பாடுகள் வெளியில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ‘‘முதலீடு செய்வதற்குத் தேவையான நிதியம் சபையில் காணப்படாமை’’ என்பது பணிப்பாளர் நாயகத்தின் கருத்தாக இருந்தது.

### 3.10 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கிராமத்திற்குக் கிராமம் தொழில் நுட்பத்தை பகிர்ந்தளிக்கும் நோக்கத்தில் 2009 ஆம் ஆண்டில் ரூபா 7,950,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட பஸ் வண்டி தற்போது மூன்று வருட அளவிலான காலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் இலக்கிடப்பட்ட திட்டமின்றி 06 கண்காட்சிக் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காகவும் கிலோ மீற்றர் 2500 ஐ விட குறைவாகவே ஓடப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான 42 வாகனங்களில் 09 வாகனங்களுக்கு மைலோ மீற்றர் செயற்பாடற்றுக் காணப்பட்டது. அந்த வாகனங்களுக்காக ரூபா 1,127,622 தொகையான எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வாகனம் ஓடிய தூர அளவு தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2011 – 2013 ஆம் காலப்பகுதிகளுக்காக சபையினால் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 2.2 மில்லியன் செலவில் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் காண்பிக்கப்பட்டுள்ள செயற்திட்ட அமுலாக்கல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் முன்னேற்றம்

2012 ஆம் ஆண்டிற்காக தனியான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் செயல் முன்னேற்ற மதிப்பீட்டிற்காக வருடாந்த முன்னேற்ற அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் போதியளவான கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பாதீட்டின் பிரகாரம் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை உள்ளவாறான செலவினங்களுடன் இணக்கஞ்செய்த போது முரண்கள் அவதானிக்கப்பட்டது. பாதீட்டு நிதியேற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே வேறுபாடு 10 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடையிலான 24 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஆ) ஆண்டின் பாதீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 350,720,000 ஆக இருந்த போதிலும் உள்ளவாறான வருமானம் ரூபா 162,510,332 ஆனமையால் சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 53 சதவீதமாக இருந்தது.

(இ) சபையில் தொழில்நுட்ப சேவை, பொறியியல், உடைந்த, லக்கம், லக்நிபெயும் போன்ற பிரிவுகளில் வருமான இலக்கினை அடைதல் 50 சதவீதத்திற்கு குறைந்த நிலையில் காணப்பட்டது.

(ஈ) பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை முறையான வகையில் கட்டுப்படுத்துவதற்காக செலவினப் பேரேடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.5 தீர்வு செய்யப்படாத கணக்காய்வு பந்திகள்

(அ) இவ்வறிக்கைத் திகதி வரையிலும் போதியளவு கவனம் செலுத்தப்படாதிருந்த பாராளுமன்ற பொது முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள்

| | **விடயம்** | **பொது முயற்சிகள் குழுவின் கட்டளை** | **பொது முயற்சிகள் குழுக் கூட்டத் திகதி** | **தற்போதைய நிலைமை அல்லது அவதானிப்பு** |
|---|---|---|---|---|
| (i) | நிதி முகாமையாளர் பதவி வெற்றிடம் | சகல பதவிகள் தொடர்பான ஆட்சேர்த்தல் முறைமை தொடர்பாக மேற்பார்வை செய்து சகல வெற்றிடங்களையும் நிரப்புதல் | 2010 திசெம்பர் 09 | நிதி முகாமையாளர் பதவியை உள்ளடக்கிய அத்தியாவசியமான பதவிகள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | ரூபா 7.7 மில்லியன் தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட மின்பிறப்பாக்கி | மின்பிறப்பாக்கி பயன்படுத்தப்படாது விற்பனை செய்யப்பட்டமையினால் ரூபா 3.3 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் உரிய சகல உத்தியோகத்தர்களுக்கும் எதிராக விசாரணை நடாத்துவதாக அறிவிக்கப் பட்டிருந்தது. | 2012 நவம்பர் 16 | பரிசோதனை நடாத்தி பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | பழுதுடன் கூடிய 68 மட்பாண்ட உற்பத்திச் சக்கரங்களினதும் 79 மட்பாண்ட உற்பத்திச் சக்கரங்களினதும் பற்றாக்குறை | இருப்புக் குறைவாக அவதானிக்கப்பட்ட 79 மட்பாண்ட உற்பத்திச் சக்கரங்கள் தொடர்பாக விசாரணை நடாத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2012 நவம்பர் 16 | விசாரணை நடாத்தி பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை |
| (iv) | ரூபா 1,412,100 தொகையான பதுளை உற்பத்திக் கண்காட்சிக் கூடம் | எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2012 நவம்பர் 16 | கண்காட்சிக்கூடம் நிர்மாணிக்கப்பட்டு தற்போது ஐந்து வருட காலம் கடந்திருந்த போதிலும் இவ்வறிக்கைத் திகதி வரையிலும் திறக்கப்பட்டிருக்க வில்லை. |
| (v) | இலங்கை சுங்கத்திற்கு உடைந்த பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட ரூபா 4.6 மில்லியன் முற்பணம் | உடைந்த பொருட்கள் அல்லது நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதாக | 2012 நவம்பர் 16 | செலுத்தப்பட்ட நிதியிலிருந்து ரூபா 175,765 தொகை இவ்வறிக்கைத் திகதி வரையிலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | வ/ப கைத்தொழில் சேவைக் கம்பனியில் ரூபா 5.3 மில்லியன் முதலீட்டிலிருந்தான நட்டம் | முறையான அங்கீகாரத்தைப் பெற்று பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. | 2012 நவம்பர் 16 | இவ்வறிக்கைத் திகதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை |
| (vii) | அமுல்படுத்தப்படாத கைத்தொழில்மயமாக்கல் | நாட்டில் 18 கைத்தொழில்மயமாக்கல் வலயங்கள் தொடர்பாக விபரமான அறிக்கை | 2012 நவம்பர் 16 | அவ்வாறான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வெற்றிடமான 89 கைத்தொழில்கள் மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | செயற்பாடற்ற 100 கைத்தொழில்கள் காணப்பட்டதுடன் அனுமதியற்ற வதிவிடங்களும் காணப்பட்டன. |
| (viii) | உடைந்த பொருள் செயற்திட்டம் | உடைந்த பொருள் கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பாக விபரமான அறிக்கை | 2012 நவம்பர் 16 | கொள்வனவு செய்யப்பட்ட இடத்தில் மேலும் விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

(ஆ) முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் போதியளவு கவனம் செலுத்தப்படாதிருந்த விடயங்கள்

---

(i) கோனபுர உணவு செயற்திட்டத்திற்காக 2006 பெப்ரவரி 03 ஆந் திகதி ஒன்று ரூபா 98,500 படி ரூபா 295,500 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 3 இயந்திரங்கள் (Dough mixer machine) அவைகளின் பயன்தரு காலத்தை விஞ்சும் வரையிலும் களஞ்சியத்தில் காணப்பட்டது.

(ii) மஹியங்கனை மியுனுகம திம்புலவத்த என்ற பெயரில் 80 பேர்ச் காணியில் அமைந்துள்ள 1400 சதுர அடியான நீர், மின்சாரத்துடன் உள்ள கட்டிடம் மற்றும் காணி 14 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக எவ்வித செயற்பாட்டிலும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) பன்னல ஆரோக்கிய தொழில்நுட்ப நிலையத்தில் 25 பேர் அளவில் வசிக்கக்கூடிய வசதியுடைய விடுதி 2004 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டிருந்தது.

(iv) காளான் செயற்திட்டத்திற்காக ரூபா 1,180,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட காளான் உலர்த்தும் இயந்திரத்தின் ஒரு பகுதி காணாமல் போயிருந்ததுடன் இயந்திரம் செயற்பாடற்று சபை வளவில் காணப்பட்டது.

(v) லக்கம் விற்பனை நிலையத்திற்காக 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 306,750 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டு

அச்சிடல் இயந்திரம் மற்றும் மென்பொருள் என்பன மீளாய்வாண்டின் போதும் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(vi) பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முடியாததாகக் காண்பிக்கப்பட்டு பாதணி உற்பத்தி செய்யும் 16 இயந்திரங்கள் அதிகமான காலத்திலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பாதணிப் பொருள் நிலையத்தில் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(vii) நலனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட கிராமிய செயற்திட்டத்திற்குரிய ரூபா 2,771,972 பெறுமதியான பாதணிகள் தைக்கும் 28 இயந்திரங்கள் பாதணிப் பொருள் நிலையத்தில் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(viii) கிராமிய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் பொது சேவை நிலையங்கள் மற்றும் நலனாளிகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 16,726,979 பெறுமதியான பொருட்கள் களஞ்சியத்தில் காணப்பட்டன. இந்தப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு வருடம் 1 இற்கும் 5 இற்கும் இடையிலான கால இடைவெளியில் காணப்பட்டதுடன் அவைகளின் பயன்பாட்டுக் காலம் கடந்த நிலையில் காணப்பட்டன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) பாதீடு
(இ) காசு, வங்கி நடவடிக்கைகள்
(ஈ) கணக்கீடு மற்றும் அச்சிடல் பிரிவின் கிரயமிடல்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்
(ஊ) வாகனப் பயன்பாடு
(எ) இருப்பு
(ஏ) கணனி முறைமை